# ஹிந்தித்தரகர்கள் கூட்டம்.

## செத்தபாஷையை உயிர்ப்பிக்கச் சூழ்ச்சி.

## வக்கீல் ஆச்சாரியார் வழவழா புராணம்.

## மீனாக்ஷிசுந்தர முதலியார் முழக்கம்.

### ஹிந்திப்பாட்டுக்கு சம்மணம்:

### தமிழ்ப் பாட்டுக்கு எழுந்து நின்று மரியாதை.

### வோட்டெடுக்கப்பயந்து ஹிந்தி பக்தர்கள் ஓட்டம்.

(நமது நிருபர்)

ஈரோடு செப்டம்பர் 8.

ஹிந்தி கட்டாய பாடமாக்க வேண்டுமா? வேண்டாமா? என்னும் விஷயத்தைப் பற்றி ஈரோடு டவுன் எலிமெண்டரி பாடசாலையில் 7–9–37 மாலை 6–30க்கு விவாதம் நடந்தது. தோழர் பாப்ளி துரை அவர்கள் தலைமை வகித்தார். முதலில் தலைவர் எழுந்து ஹிந்தியில் ஒருவருக்கும் புரியாதபடி கடவுள் வாழ்த்துச் சொன்னார். அது சமயம் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். பின் தோழர் சிவபாத ஹிருதயம் பிள்ளை அவர்கள் எழுந்து தமிழில் கடவுள் வாழ்த்துச் சொல்லவே எல்லோரும் எழுந்து நின்றார்கள்.

ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கவேண்டுமென்று வாதஞ் செய்யத்தொடங்கிய தோழர் நரசிம்மாசாரியார் இதற்கு சம்மந்தமற்ற வேறு விஷயங்களையெல்லாம் பலபடப் பேசி "விடுதலை" பார்ப்பனர்களைத் திட்டுகிறதென்றும் நாளை இந்தக் கூட்டத்தைப் பற்றி வெளியிடும் போது பார்ப்பனர்களைத் தூஷிக்குமென்றும் பேசி முடித்தார். உம், இவ்வளவுதானா? என்று நினைத்துப்பொது ஜனங்கள் இடையிடையே கைகொட்டி நகைத்தார்கள். பிறகு தோழர் மீனாக்ஷி சுந்திர முதலியார் அவர்களு எழுந்து தமிழின் நிலைமை முன்னமேயே மிகக்கேவலமாக இருக்கிறதென்றும் தமிழ் நாட்டில் தமிழை விருத்திசெய்ய ஒன்றும் முயற்சிக்காமல் ஏற்கனவே படிப்புச் சுமையால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற சிறுமாணவர்கள் தலையில் ஹிந்தியையும் கட்டியடிப்பதென்றால் அது சகிக்கமுடியாதென்றும் மிக அழகாகவும் தெளிவாகவும் பேசிமுடித்தார்.

பிறகு தோழர் நரசிம்மாச்சாரியாருக்கு சாதகமாகதோழர்கள் சுப்புரத்தினமய்யர், வெங்கிடாசலசெட்டியார், கோபாலசெட்டியார் ஆகியவர்கள் ஹிந்தி இந்தியாவில் 25 கோடி மக்களால் பேசப் படுகிறதென்றும் கட்டாய பாடமாக்கினால்தான் மாணவர்கள் படிப்பார்கள் என்றும் பரிந்து பேசினார்கள். தோழர் முதலியார் அவர்களுக்குச் சாதகமாகத் தோழர்கள் ஆளவந்தார், சுப்ரமண்ய பிள்ளை, எஸ். வி. லிங்கம் ஆகியவர்கள் ஹிந்தி சில இடங்களில் சுமார்8கோடி ஜனங்களால்தான் பேசப்படுகிறதென்றும், செத்துப்போன சமஸ்கிருதத்தை உயிர்ப்பிக்கவே சூழ்ச்சி செய்யப்படுகிறதென்றும், ஹிந்தியைவிட இங்கிலீஷ் எத்தனையோ விதங்களில் மேலானது என்றும் பேசி முடித்தார்கள்.

கூட்டத் தலைவர் அவர்கள், தான் நடுநிலைமை வகிப்பதாகச் சொல்லிக்கொண்டார்.

இந்த விவாதத்தின் முடிவு மறுபடியும் கூடுகின்ற ஆசிரியர் சங்கத்தால் தெரிவிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. ஓட்டு எடுத்திருந்தால் கட்டாயம் ஹிந்தி தோல்வியடையுமென்று கருதியேபிறகு பார்த்துக் கொள்ளலாமென்று கூட்டம் கலைந்ததாகத்தெரிகிறது.

இந்தக் கூட்டத்தில் பார்ப்பனர்களும், விபீஷணர்களும், ஆஞ்சநேயர்களும் ஒரு சார்பாகவும் உண்மைத் தமிழர்கள் மற்றொரு சார்பாகவும் இருந்தார்கள்.

எலக்ஷனுக்கு முன் ஓட்டர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைப் பொதுமக்கள் மறக்கும்படி செய்யவே இந்த ஹிந்திப் பிரச்சினையில் இறங்கி ஆழமறிவதற்காக, முதல் சரணாகதி மந்திரி, காலைவிட்டுப் பார்க்கிறார் என்று சொல்லப்படுகிறது.